PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jnrgroup.org

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 21 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 132

சாலையோர வியாபாரிகள், தங்களது வணிகத்தை விரிவுபடுத்த பிரதமரின் ஸ்வநிதி திட்டம் உதவுகிறது: மத்திய அமைச்சர் மனோகர் லால்



சென்னை – 21 நவம்பர், 2026

சாலையோர வியாபாரிகள், தங்களது வணிகத்தை விரிவுபடுத்த பிரதமரின் ஸ்வநிதி திட்டம் உதவுகிறது: மத்திய அமைச்சர் மனோகர் லால்.

சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின் கீழ், 2026- ம் ஆண்டுக்கான ஸ்வநிதி சம்மான் விருதுகளை மத்திய வீட்டுவசதி, நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் வழங்கினார். புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான விழாவில் இணையமைச்சர் டோகன் சாஹு உள்ளிட்டோர. பங்கேற்றனர். மாநிலங்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், வங்கிகள் ஆகியவற்றின் சிறப்பான செயல்பாட்டைப் பாராட்டி 52 விருதுகள், 5 சிறப்பு அங்கீகாரங்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

திட்டத்தின் முக்கிய சாதனைகள்:

2020 ஜூனில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம், சுமார் 81 லட்சம் சாலையோர வணிகர்களுக்கு ரூ. 20,000 கோடி மதிப்பிலான 1.21 கோடிக்கும் அதிகமான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

2025 ஆகஸ்டில் திட்டம் மாற்றியமைக்கப்பட்ட பிறகு, முதல் ஆண்டில் 10.6 லட்சம் புதிய பயனாளிகளுக்கு ரூ. 6,294 கோடி மதிப்பிலான 22 லட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவது தவணைக் கடனைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு ரூ. 30,000 வரை கடன் வரம்புள்ள யுபிஐ-யுடன் இணைந்த ரூபே கடன் அட்டையும் வழங்கப்படுகிறது.

52 லட்சத்துக்கும் அதிகமான பயனாளர் குடும்பங்களின் சமூகப் பொருளாதார விவரங்கள் சேகரிக்கப்பட்டு, 8 மத்திய அரசுத் திட்டங்களின் கீழ் 1.62 கோடிக்கும் அதிகமான நல உதவிகள் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.